

# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் பாடுபொருள் மாற்றங்கள்

தொகுதி – III


பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் ஆர். மோகனதாஸ்

282. **சு. சதீஷ்குமார்** 1363
தமிழ்த் தலபுராணங்களில் நக்கீரர் வரலாறும் மாற்றமும்

283. **முனைவர் கோ. சங்கரவீரபத்திரன்** 1369
காலந்தொறும் கைக்கிளை

284. **முனைவர் வெ.அ. நாகரத்தினம்** 1373
பாடுபொருள்களில் கற்பு பெருமிடம்

285. **முனைவர் எஸ். குமரன்** 1378
சமூகவியல் நோக்கில் தமிழ் அற இலக்கியங்கள்

286. **முனைவர் அ. ஹெப்சி ரோஸ் மேரி** 1385
தமிழ் இலக்கண நூல்களில் பாடுபொருள் மாற்றம்

287. **முனைவர் த. விஜயலட்சுமி** 1389
பெண் எழுத்துக்களில் பாடுபொருள் மாற்றம்

288. **மா. ஜாஸ்மின் பிரியா** 1394
புதிய ஏவாள் சிறுகதையில் காணப்படும்
சமகாலநிகழ்வுகளும் பாடுபொருள் மாற்றங்களும்

289. **முனைவர் வேல். கார்த்திகேயன்** 1400
முத்தொள்ளாயிரமும் பாடுபொருள் மாற்றமும்

290. **சு. பலராமன்** 1404
தமிழ்ப் பண்பாட்டில் வண்ணத்திரையும்
பெண்களும் புதினப்பிரதிகளை மையமிட்டு

291. **முனைவர் க. சிவனேசன்** 1409
ஆண்டாள் பாடல்களில் நாட்டார் வழக்காறுகள்

292. **இரா. அன்னலட்சுமி** 1415
சிலப்பதிகாரத்தில் மதுரை மாநகரின் நகரமைப்பு

293. **சி. செந்தில்வடிவு** 1420
மெய்ஞானம் உணர்த்தும் ஞானிகள்

294. **ஆ. சந்திரசேகர்** 1424
பாடுபொருளைக் கைக்கொள்ளும் 'காமத்திப்பூ'

295. **முனைவர். மொ. இரவிக்குமார்** 1427
மழலைகளை மீட்போம்

296. **அ. லதா மகேசுவரி** 1432
தமிழன்பன் கவிதைகள் காட்டும் சமுதாயம்

297. **முனைவர் இரா. இளவரசு** 1437
மறுவாசிப்பில் முல்லைப்பாட்டு

298. **முனைவர் மா. லட்சுமிபிரியா** 1442
இலக்கண நூல்களில் உவம உருபுகளின் மாற்றங்கள்

# 295. மழலைகளை மீட்போம்

முனைவர் மொ. இரவிக்குமார்
தமிழ்த்துறைத்தலைவர் (சுயநிதிப்பிரிவு)
கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவை - 641 029.

தமிழ் இலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சமூகத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளையும், நிதர்சனங்களையும் பதிவு செய்கின்றன. மனித வாழ்வின் ஒவ்வொரு உணர்வுகளையும் சமுதாயத்தின் முன்பு எடுத்துரைக்கின்ற பாங்கில் இலக்கியமும், வாழ்வியலும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. எனவே குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் ஆராய்ந்து நோக்க அக்காலத்தில் தோன்றிய இலக்கியப் பதிவுகள் நமக்குத் துணைபுரிகின்றன.

அவ்வகையில் தற்காலக் கவிதைகளில் கோடிட்டுக் காட்டப்படுகின்ற பொருண்மைகளுள் ஒன்றான குழந்தைத் தொழிலாளர்கள் நிலை குறித்தும் அவர்களின் வாழ்வியல் சிக்கல்கள் பற்றியும், குழந்தைகளுக்கான முக்கியத்துவம் சங்காலந்தொட்டு இக்காலம் வரையில் எத்தகு மாற்றம் எய்தியிருக்கின்றது என்பதையும் இலக்கியச் சான்றுகளின் வாயிலாகக் காண்போம். குழந்தைகள் பற்றிப் பேசப்பட்ட இலக்கியங்களின் பாடுபொருள்கள் காலந்தோறும் எத்தகு மாற்றம் பெருகின்றன, அதற்கான சூழலையும், குழந்தைத் தொழிலாளர்களின் வாழ்வியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரு தீர்வினையும் முன்வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வாழ்வியல் சூழல்

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையை தீர்மானிப்பதிலும் அவனைச் சூழ்ந்துள்ள சமுதாயமும், சூழலும் அடிப்படையாக அமைகின்றன. அவ்வகையில் குழந்தைத் தொழிலாளர்கள் என்பவர்கள் தானாக உருவாகவில்லை. குடும்பத்தின் வறுமை காரணமாகவும், ஏற்றத் தாழ்வு காரணமாகவும், அறியாமையைப் போக்கும் கல்வி மறுக்கப்பட்டும் உருவாக்கப்படுகின்றார்கள். இதனை,

***'பசிக் கயிற்றில் பம்பரமாகி விட்டவர்கள்***
***பம்பரம் சுற்றுவதெங்கே?'***
***'பூக்களை ஏந்த வேண்டிய இந்த மெல்லிய***
***காம்புகளின்***
***வாழ்க்கையில் பாரத்தை ஏற்றிவைத்தது யார்?'***
***(தீக்குச்சிகள், அப்துல்ரகுமான்)***

என்று தீக்குச்சிகள் எனும் கவிதையின் வாயிலாக அப்துல்ரகுமான் இச்சமுதாயத்தை நோக்கி வினவியுள்ளதன் மூலமாக உணரலாம்.